Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.83/2022

| | | |
|---|---|---|
| | | Prosecution PW-1 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | விஜய சாரதா |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

**1 ம் எதிரி P.T. Warrant ல் ஆஜர்படுத்தப்பட்டார். 2 வது எதிரி ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of **05.07.2023**

**முதல் விசாரணை**

1) நான் தெற்கு காந்திகிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வீட்டில் இருந்து வருகிறேன். கடந்த 27.01.2021 ஆம் தேதி காலை 04.45 மணிக்கு என் வீட்டின் வாசலில் கோலம் போடுவதற்காக வந்தேன். அப்போது வாசலைக் கூட்டிக்கொண்டிருந்தேன். அப்போது பின்னர் இருசக்கர வாகனத்தில் வந்த ஒருவர் என் கழுத்தில் இருந்த ஒரு பவுன் தங்க செயினை பறித்துக்கொண்டு சென்றுவிட்டார். நான் சத்தம்போட்டவுடன் என்

K.Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.

மாமியார் வீட்டின் உள்ளே இருந்து வெளியே வந்தார். பின்னர் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் வந்தார்கள். பின்பு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும்.**

2) பின்பு ஜுன் மாதத்தில் செயின் கிடைத்துவிட்டதாக சொல்லி போலிசார் நகைகளை அடையாளம் காட்ட வர சொன்னார்கள். நான் அடையாளம் காட்டினேன். சாட்சி நீதிமன்றத்தில் புளூ சட்டை அணிந்திருக்கும் (பேய் பாஸ்கரை அடையாளம் காட்டி) என்பவர்தான் செயின் திருடியதாக போலிசார் சொன்னார்கள் என்று சொன்னார். அவரது பெயர் எனக்கு தெரியவில்லை. பின்பு நீதிமன்றத்தில் எனது செயினை இடைக்காலப்பராமறிப்பில் மனுதாக்கல் செய்து பெற்றுச் சென்றேன். என்னிடம் காட்டப்படும் போட்டோவில் உள்ள செயின்தான் நான் இடைக்காலப்பராமறிப்பில் பெற்றுச் சென்ற எனது செயின் ஆகும். அந்த செயின் சா.பொ.1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

1) நான் எம்.காம்., சீ.ஏ., படித்துள்ளேன். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகாரை யார் எழுதினார்கள் என்றால் என்னுடைய மாமனார் எழுதினார். சம்பவம் நடந்தது அதிகாலை 05.00 மணிக்குள் இருக்கும். அப்போது இருட்டாகத்தான் இருக்கும். நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைத்தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் செயின் பறித்த நபரின் பெயைரை போலிசார் சொன்னதன் பேரில்தான் நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். புகார் கொடுப்பதற்கு நானும் என் மாமனாரும் காவல் நிலையத்திற்கு சென்றிருந்தோம். சம்பவத்தின்போது நான்தான் சத்தம் போட்டேன். பிறகு எனது மாமியார் மற்றும் எதிர் வீட்டு ரமேஷ் என்பவரும் வந்தார். சம்பவம் நடந்த நேரத்தில் என் மாமனார் சேலம் சென்றிருந்தார். புகாரில் ரமேஷ், செந்தில்குமார், சதீஸ்குமார் ஆகியோர் சாட்சி கையெழுத்து செய்தார்கள். வெள்ளைத் தாளில் போலிசார் கையெழுத்து பெற்றாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் காலை 09.00 மணிக்கு புகார் கொடுத்தேன். புகாரை என் மாமனார் எழுதவில்லை என்றாலும் போலிசார்தான் எழுதிக்கொடுத்தார்கள் என்றாலும் சரியல்ல. என் நகையை வேறெங்கோ தொலைத்துவிட்டு போலிசாரிடம்

K.Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.

பொய்யான புகாரை கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. போலிசார் போட்ட வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

K.Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.

Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.83/2022

| | |
|---|---|
| | Prosecution PW-2 |
| Deposition of Witness for | Defence |
| | Court |
| Name : | காவேரி |
| Father's Name : | |
| Village : | |
| Taluk : | |
| District : | |
| Caste : | |
| Calling : | |
| Religion : | |
| Age : | |

1 ம் எதிரி **P.T. Warrant** ல் ஆஜர்படுத்தப்பட்டார். 2 வது எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of **05.07.2023**

**முதல் விசாரணை**

1) நான் தெற்கு காந்திகிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வீட்டில் இருந்து வருகிறேன். அ.சா.1 எனது மருமகள் ஆவார். கடந்த 27.01.2021 ஆம் தேதி எனக்கு பல் பிடுங்கியிருந்ததால் நான் வீட்டில் படுத்திருந்தேன். அப்போது என் மருமகள் சத்தம் போடும் குரல் நான் சென்று பார்த்தபோது என் மருமகள் அழுது கொண்டிருந்தாள். என் கழுத்தில் இருந்த ஒரு பவுன் செயினை பறித்து சென்று விட்டார்கள் எனவும் மற்ற

K.Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.

செயினை கையில் பிடித்துக்கொண்டதாகவும் சொன்னார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

என் மருமகள் சத்தம்போட்ட பிறகுதான் நான் வெளியே வந்து பார்த்தேன். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. அ.சா.1 எனது மருமகள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

K.Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.

Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.83/2022

| | |
|---|---|
| | Prosecution PW-3 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | ரமேஷ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

1 ம் எதிரி **P.T. Warrant** ல் ஆஜர்படுத்தப்பட்டார். 2 வது எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of **05.07.2023**
**முதல் விசாரணை**

1) நான் தெற்கு காந்திகிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் Eb யில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் எனது வீட்டிற்கு எதிரில் குடியிருக்கிறார்கள். கடந்த 27.01.2021 ஆம் தேதியன்று காலையில் நான் நடைபயிற்சி செல்வதற்காக வண்டியை துடைத்துக்கொண்டிருந்தேன். அப்போது செயினை அறுத்து சென்றுவிட்டதாக சத்தம் வந்தது. என்னவென்று வெளியே வந்து பார்த்தேன். விஜய சாரதா

K.Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.

வாசல் கூட்டிக்கெண்டிருந்தபோது அவருடைய செயினை பறித்து சென்றதாக சொன்னார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. சத்தம் கேட்டுத்தான் வெளியே வந்து பார்த்தேன். அ.சா.1 எனது எதிர் வீட்டுக்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

K. Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.